**கவனிக்க** .- 07.06.2013 ஆந் திகதிய வர்த்தமானியின் பகுதி I : தொகுதி (III) பிரசுரிக்கப்படவில்லை.

# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අංක 1815 - 2013 ජූනි මස 14 වැනි වැනි සිකුරාදා - 2013.06.14

1815 ஆம் இலக்கம் - 2013 ஆம் ஆண்டு யூன் மாதம் 14 ஆந் திகதி வெள்ளிக்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

## பகுதி II – சட்ட சம்பந்தமானது

(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாக கோவை செய்து வைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்கள் தரப்பட்டுள்ளன.)


| | பக்கம் | | பக்கம் |
|---|---|---|---|
| சட்டங்கள் | - | பிசுக்கால் மால்சல்மாரின் நியமனங்கள் | - |
| சட்டமூலங்கள் | - | பிசுக்கால் விற்பனை பற்றிய அறிவித்தல்கள் | - |
| மேன்முறையீட்டு நீதிமன்றச் சட்ட அறிவித்தல்கள் | - | மரணசாதன வழக்குகளின் அறிவித்தல்கள் | - |
| உயர் நீதிமன்ற அறிவித்தல்கள் | - | சட்டக் கல்விச் சபையின் அறிவித்தல்கள் | - |
| உயர் நீதிமன்ற குற்றவிசாரணை பற்றிய அறிவித்தல்கள் | - | நொத்தாரிசுமார் பட்டியல் | - |
| மாவட்ட நீதிமன்ற, நீதிவான் நீதிமன்ற அறிவித்தல்கள் | - | நானாவித அறிவித்தல்கள் | 74 |
| கடனிறுக்க முடியாமைக்கான வழங்குகளின் அறிவித்தல்கள் | - | பிசுக்கால் மார்சல்மாரின் நியமனங்கள் | - |


**கவனிக்க**.- (i) கலாநிதி மாலினி பொன்சேகா மன்றம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் 2011, மே மாதம் 06 ஆந் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியின் பகுதி II இற்குக் குறைநிரப்பியாக வெளியிடப்படுகிறது.

(ii) தகவல் சுதந்திரம் சட்டமூலம் 2011, மே மாதம் 13 ஆந் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியின் பகுதி II இற்குக் குறைநிரப்பியாக வெளியிடப்படுகிறது.

**வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான**

**முக்கிய அறிவித்தல்கள்**

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளின் இறுதியில், ஒவ்வொரு மாதத்தின் முதல் வாரத்தின், வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியும் நேரமும் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.

வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினம் அவை **வர்த்தமானியில் பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை, நண்பகல் 12.00 மணியாகும்**. இறுதித் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்களான, பதவி-வெற்றிடங்கள் மற்றும் பரீட்சைகளுக்கு விண்ணப்பம் கோரும் அறிவித்தல்கள், கேள்விப்பத்திர அறிவித்தல்கள் அத்துடன் ஏல விற்பனைத் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்கள் என்பன அவ்வவ் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறை செலுத்துவோர் ஆக்கபூர்வமாக பயனுறும் வகையில் அவை பிரசுரிக்கப்படுவதற்காக அரசாங்க அச்சகத்துக்கு அனுப்பிவைக்கப்படும் திகதியிலிருந்தும் அத்துடன் அவை பிரசுரமாகும் திகதியிலிருந்தும் போதிய கால அவகாசம் கொண்டதாக தயாரிக்கப்பட்டு அனுப்பிவைக்கப்பட வேண்டும் என சகல அரசாங்க திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆகியன அறிவுறுத்தப்படுகின்றன. அறிவித்தல்கள் தொடர்பிலான பிழைதிருத்தங்கள் சம்பந்தமாக செய்யப்படும் முறைப்பாடுகள் மற்றும் விசாரணைகள் என்பன வர்த்தமானியில் குறிப்பிட்ட அறிவித்தல்கள் பிரசுரமாகிய திகதியிலிருந்து மூன்று மாதங்கள் கழிந்த பின்னர் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா என்பதனை கவனத்திற்கொள்ளவும்.

வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரமாகும் சகல அறிவித்தல்களும், அவை பிரசுரமாகும் திகதிக்கு **இரண்டு வாரங்களுக்கு முன்னர்**, அதாவது 2013, யூலை மாதம் 05 ஆந் திகதி வெள்ளிக்கிழமை பிரசுரிக்கப்படவேண்டிய அறிவித்தல்கள் 2013, யூன் மாதம் 21 ஆந் திகதி நண்பகல் 12.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு தபால் மூலம் அல்லது நேரில் சேர்ப்பிக்கப்பட வேண்டும்.

**பீ. எச். எல். வீ. டீ சில்வா,**
அரசாங்க அழுத்தகர் (பதில்).

அரசாங்க அச்சுத் திணைக்களம்,
கொழும்பு 8,
2013 ஆம் ஆண்டு சனவரி மாதம் 01 ஆந் திகதி.
இவ்வர்த்தமானியை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.

# நானாவித அறிவித்தல்கள்

## கொழும்பு மேல் மாகாண மேல் நீதிமன்றில் (சிவில் நடைமுறைக்கமைவான செயற்பாடு)

வழக்கு இல. மே. நீ. (சிவில்) 10/2013/ க. தன்மை : முடிவுறுத்தல்

கொழும்பு - 04, ஜோசப் லேன், 28 ஆம் இலக்கத்தில் அமைந்துள்ள றச்ஊட் இன்வெஸ்ட் மென்ற்

மற்றும்

2007 ஆம் ஆண்டு நிறைவேற்றிய 07 ஆம் இலக்கச் சட்டம் அத்தியாயம் 12 இன் கீழ் செய்த முடிவுறுத்தல் விண்ணப்பம்

பிறோஸ் அஸ்கராலி அபாஸ்போய் முல்லா முசாஜி இல. 121, மலே வீதி, கொழும்பு - 02.

- மனுதாரர்-

கொழும்பு - 02, மலே வீதி, 121 ஆம் இலக்கத்தைச் சேர்ந்த பிறோஸ் அங்கராலி அபாஸ்போய் முல்லா முசாஜி அவர்களால் கொழும்பில் செயற்படும் மேல் மாகாண மேல் நீதிமன்றில் கம்பனி முடிவுறுத்தல் மனுவொன்றை 2013 ஆம் ஆண்டு பங்குனி மாதம் 27 ஆந் திகதி சமர்ப்பித்துள்ளாரென இத்தால் அறிவித்தல் கொடுக்கப்படுகிறது. குறித்த மனுவை 2013, ஆனி மாதம் 27 ஆந் திகதி விளக்கத்துக்கு நியமிக்கப்பட்டுள்ளதுடன், யாரேனும் கொடுக்குமதியாளரோ வருமதியாளரோ இருப்பின் அவர்கள் இம்மனுவை அனுசரிக்கவோ எதிர்க்கவோ இருப்பின் விளக்க நாளில் தோற்றுமுகமாக அவராகவோ, சட்டத்தரணி மூலமோ தோற்றுமாறும் அவர்களுக்குத் தேவைப்படின் மனுவின் பிரதி அக்கொடுக்குமதியாளருக்கோ வருமதியாளருக்கோ வழங்கப்படுமென்றும் அதற்குரிய கட்டணம் அறவிடப்படுமென்றும் அறியத்தரப்படுகிறது :-

சுதத் பெரேரா அஸோஸியட்ஸ்,
5, 9 ஆவது ஒழுங்கை,
நாவல வீதி, நாவல.

**குறிப்பு**.- குறித்த மனுவின் விளக்கத்தில் யாரேனும் தோற்றுவதாக இருந்தால் மேற்கூறிய சுதத் பெரேரா அஸோஸியட்ஸ் அவர்களுக்கு நேராகவோ தபால் மூலமாகவோ எழுத்து மூலமாகவோ அறியத்தருதல் வேண்டும். அவ் அறிவித்தலில் குறித்த நபரின் பெயர், முகவரி அல்லது ஸ்தாபனத்தின் பெயர், முகவரி அல்லது சட்டத்தரணியினுடைய பெயர் (இருப்பின்) இருப்பதோடு அவ் அறிவித்தலில் குறித்தவர்கள் ஒப்பமிட்டிருத்தல் வேண்டும். அறிவித்தல் 2013 ஆம் ஆண்டு ஆனி மாதம் 26 ஆந் திகதி பிற்பகல் 6.00 மணிக்கு முன் கிடைக்கக்கூடியதாக தபால் மூலமோ, நேராகவோ உரிய காலத்தில் கிடைக்குமாறு அனுப்பி வைத்தல் வேண்டும்.

சுதத் பெரேரா அஸோஸியட்ஸ்.

6-349

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் பதிப்பிக்கப்பெற்றது.